[1974 மார்ச் 25

சென்னையிலிருந்து புறநகர் பேருந்து வழித்தடங்கள்

*605 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக்கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எப்போது நிறைவடையும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தடம் எண் 92-ஏ (பிராட்வே-ஊத்துக் கோட்டை) பேருந்தினை பேரண்டூர் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கா. வேழவேந்தன்: இந்த ஊருக்கு நல்ல தார்ச்சாலையும், 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் இருப்பதனால் ஊத்துக்கோட்டை பேருந்தினை 3 மைல் நீட்டித்து பேரண்டூர் வரை சென்று திரும்ப மறுபரிசீலனை செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சாலையின் காரணமாக இந்தப் பதில் தரப்படவில்லை. போதுமான பயணிகள் இருக்கமாட்டார்கள் என்ற அடிப்படையில் இந்த பதில் தரப்பட்டிருக்கிறது.

■606 வினா.—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கண்ணம்பாக்கம் செல்லும் வழித்தடம் எண் 113 பேருந்து முறையாக, நேரந் தவறாமல் செல்ல எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

(இ) இவ்வழித்தடத்தில் பழைய வண்டியை மாற்றி புது வண்டி விடும் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) 113 ஆம் எண் வழித்தடத்தில் (வள்ளலார் நகர்-கண்ணம்பாக்கம்) ஒரு பேருந்து ஓடுகிறது. நாளொன்றுக்கு ஆறு பயணத் தடவைகள் மேற்கொள்கிறது. பல்லவன் போக்குவரத்துக் கழகம் தான் இயங்கும் பேருந்து வழித் தடங்கள் அனைத்திலும் பேருந்துகளை நேரந் தவறாமல் விடுவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்கிறது.

(இ) இப்பேருந்துகளின் ஆயுட் காலமாகிய 8 ஆண்டுகள் முடிவடைவதன் மேல், அவற்றிற்குப் பதிலாக புதிய பேருந்துகள் விடப்படும்.

திரு. கா. வேழவேந்தன்: அந்தப் பேருந்துகளின் ஆயுட்காலம் இன்னும் இருந்தாலும் அவையெல்லாம் இடையிடையே நின்றுவிடுகின்றன என்ற புகார்கள் அடிக்கடி வருகின்றன. அந்த வழித்தடங்களிலே ஓடுகின்ற